APPOLO STUDY CENTRE

# TNPSC GROUP I / II - PRELIMINARY
# INDIAN POLITY – WORKSHEET

## அரசியலமைப்புச் சட்டதிருத்தம்

❖ இந்திய அரசமைப்பு நெகிழும் மற்றும் நெகிழாத் தன்மையைக் கொண்டது.

❖ இது பிரிட்டனில் உள்ளதைப்போல் எளிதாகவோ அல்லது அமெரிக்காவைப் போல் கடினமாகவோ மாற்ற வேண்டியதாக அல்லாமல் இரண்டின் கூட்டிணைப்பாக உள்ளது.

❖ இந்திய அரசமைப்பின் பகுதி XX அரசமைப்பின் சட்டத்திருத்தம் என்பது பற்றிக் கூறுகிறது. இதில் சரத்து 368 அரசமைப்பைத் திருத்தும் நாடாளுமன்றத்தின் அதிகாரம் மற்றும் அதற்கான நடைமுறை பற்றி எடுத்துரைக்கிறது.

❖ நாடாளுமன்றத்தினால் அரசியலமைப்பில் செய்யப்படும் மாற்றமானது அதன் “அடிப்படை கட்டமைப்பினை” மாற்றாமல் இருக்க வேண்டும் என்பதை கேசவனந்த பாரதி 1973 வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

❖ அரசியலமைப்புச் சட்டதிருத்த முறையானது தென்ஆப்பிரிக்கா அரசியலமைப்பில் இருந்து எடுக்கப்பட்டது.

### திருத்தம் செய்வதற்கான செயல்முறை (Procedure to Amendment)

அரசியலமைப்பைத் திருத்தம் செய்யும் நடைமுறையானது சரத்து 368ல் பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

❖ சரத்து 368 பாராளுமன்றத்தில் ஏதாவது ஒரு சபையில் மட்டுமே அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான மசோதாவை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதை குறிப்பிடுகிறது.

❖ அதாவது மாநில சட்டமன்றத்தில் இல்லாமல் பாராளுமன்றத்தில் மட்டுமே அரசியலமைப்பு திருத்தம் செய்வதை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது.

❖ இந்த திருத்த மசோதா அறிமுக செய்ய ஜனாதிபதியின் முன் அனுமதி அவசியமில்லை.

❖ மசோதா அறிமுகத்திற்கு பிறகு இரு அவையிலும் இருக்கும் உறுப்பினர் எண்ணிக்கையில் 2ல் 3 பங்கு பெரும்பான்மை மூலமும், மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் பெரும்பான்மை (50% க்கு அதிக) மூலமும் நிறைவேற்றப்பட வேண்டும்.

❖ இந்த மசோதா இரு அவைகளில் ஏதாவது ஒன்றில் நிறைவேற்றப்படவில்லை எனில், இந்த மசோதா நிறைவேற கூட்டு அமர்வுக்கு அனுமதி இல்லை.

❖ இந்த மசோதா அரசியலமைப்பின் கூட்டாட்சி விதிகளைத் திருத்த விரும்பினால், அது பெரும்பான்மையான மாநிலங்களின் சட்டமன்றங்களால் எளிய பெரும்பான்மையுடன் அங்கீகரிக்கப்பட வேண்டும், அதாவது மாநில சட்டமன்ற அவையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும்.

❖ நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் முறையாக நிறைவேற்றப்பட்டு, தேவைப்பட்டால் மாநில சட்டமன்றங்களால் அங்கீகரிக்கப்பட்ட பிறகு, மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

❖ சட்டத்திருத்த மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் குடியரசுத்தலைவர் கட்டாயம் அம்மசோதாவிற்கு கையொப்பம் இட வேண்டும் (1971-ம் ஆண்டு 24வது சட்டத்திருத்தம்). அவர் இந்த மசோதாவுக்கு தனது ஒப்புதலைத் தடுக்கவோ அல்லது நாடாளுமன்றத்தின் மறுபரிசீலனைக்கான மசோதாவை திரும்பப் அனுப்பவோ முடியாது.

❖ குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு பிறகு இவை சட்டமாக மாறுகிறது. (அரசியலமைப்பு சட்டத்திருத்தச்சட்டம்) எனவே அந்த சட்டத்தின் விதிகளுக்கேற்ப அரசியலமைப்பு திருத்தப்படுகிறது,

**சட்டத்திருத்ததின் வகைகள்**

தனிப்பெரும்பான்மை மற்றும் பாதி மாநில சட்டமன்றங்களில் எளிய பெரும்பான்மையுடன் ஒப்புதல் ஆகிய இரண்டு திருத்த முறைகள் மட்டுமே சரத்து 368 கூறப்பட்டுள்ளது

1. சாதாரண பெரும்பான்மை (அ) எளிய பெரும்பான்மை
2. சிறப்பு பெரும்பான்மை
3. சிறப்பு பெரும்பான்மை மற்றும் மாநில சட்டமன்றங்களின் ஒப்புதல்

**1. சாதாரண பெரும்பான்மை (அ) எளிய பெரும்பான்மை**

அவைக்கு வருகை புரிந்து வாக்களிக்கும் நபர்களில் 50 சதவீத்திற்கு மேல் ஆதரவினை பெறுதல் சாதாரண பெரும்பான்மை

**சாதாரண பொரும்பான்யையின்படி செய்யப்படும் சில திருத்தங்கள்**

- புதிய மாநிலத்தை சேர்ப்பது அல்லது உருவாக்குவது
- மாநில எல்லைகளை மாற்றி அமைப்பது

- மாநில சட்டமன்ற மேலவையை கலைப்பது அல்லது உருவாக்குவது
- 2 வது அட்டவணையை திருத்தல்
- பாராளுமன்ற கூட்டத்திற்கான குறைந்தபட்ச உறுப்பினர் வருகையை மாற்றியமைக்க
- பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊதியம் மற்றும் படிகள்
- அலுவலக மொழிகளின் பயன்பாடு
- பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றங்கள் தேர்மல் தொடர்பானவை
- யூனியன் பிரதேசம்
- 5வது அட்டவணை மற்றும் 6வது அட்டவணை
- தொகுதிகள் மறுவரையறை
- பாராளுமன்ற நடை முறை விதிகள்
- பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை விதி
- பாராளுமன்றத்தில் ஆங்கில மொழிப் பயன்பாடு
- குடியுரிமை தொடர்பான திருத்தங்கள்

**2. சிறப்பு பெரும்பான்மை**

அவையின் மொத்த உறுப்பினர்களில் 2/3 பங்கிற்கு குறையாமல் வருகை புரிந்து மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பாதிக்கு மேல் (50 சதவீத்திற்கு மேல் ஆதரவாக வாக்களிக்க வேண்டும்

**சிறப்பு பெரும்பான்மையின் படி செய்யப்படும் சில திருத்தங்கள்**

- அடிப்படை உரிமைகள்
- அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைக் கோட்டுபாடுகள்
- சாதரண பெரும்பான்மை முலம் திருத்தப்படாத மற்ற சலுகைகள்

**3. சிறப்பு பெரும்பான்மை மற்றும் மாநில சட்டமன்றங்களின் ஒப்புதல்**

- சிறப்பு பெரும்பான்மையின்படி நிறைவேற்றப்பட்ட மசோதா பாதிக்கும் மேற்பட்ட மாநில சட்டமன்றங்களில் எளிய பெரும்பான்மையின் படி நிறைவேற்றப்பட வேண்டும்
- பின்வரும் பகுதிகளில் திருத்தம் செய்ய மசோதாக்களை அறிமுகம் செய்யும் போது இவற்றிக்கு மாநில சட்டமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டும். அவை

- பின்வரும் சரத்துக்கள் - 54, 55, 73, 162, 241.
- பகுதி V-ல் ஒன்றிய நீதித்துறை பகுதி VI-ல் உயர்நீதிமன்றம்.
- பகுதி XI -ல் மத்திய மாநில சட்டமன்ற உறவுகள்.
- 7-வது அட்டவணையில் உள்ள பட்டியல்கள்.
- பாராளுமன்றத்தில் மாநிலங்கள் பிரதிநிதித்துவம்.
- சரத்து 368- ல் கொடுக்கப்பட்டுள்ள சலுகைகள்.

- அரசியலமைப்பில் கூட்டாச்சி தொடர்பான இனங்கள்
- குடியரசுத் தலைவர் தேர்தல் முறை
- மத்திய மற்றும் மாநில நிர்வாகத் துறையின் அதிகாரத்தை நீட்டித்தல்
- உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள் தொடர்பானவைகள்
- மத்திய மாநில சட்டமன்ற அதிகாரப் பங்கீடு
- 7வது அட்டவணைகள்
- பாராளுமன்றத்தில் மாநிலங்களின் பங்களிப்பு

**திருத்தும் நடைமுறையின் முக்கியத்துவம்**

இது, கே.சி. வியர் கூற்றுப்படி, "நெகிழும் மற்றும் நெகிழாத்தன்மைக்கு இடையே ஒரு நல்ல சமநிலையை ஏற்படுத்துகிறது"

கே.சி. வியர் இந்திய அரசியலமைப்பில் உள்ள பல்வேறு திருத்த நடைமுறைகளை பாராட்டியுள்ளார். அவர், "திருத்த நடைமுறையில் உள்ள இந்த வகை அரிதாகக் காணப்பட்டாலும் இது மதிநுட்பமுடையது" என்று கூறியுள்ளார்.

கிரான்வில் ஆஸ்டினின் கூற்றுப்படி, "திருத்த செயல்முறை அரசியலமைப்பின் மிகவும் ஆற்றலுடைய அம்சங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. இது சிக்கலானதாகத் தோன்றினாலும், வித்தியாசமானது மட்டுமே".

"திருத்தம் என்பது பாராளுமன்ற இறையாண்மை மற்றும் எழுதப்பட்ட அரசியலைப்பின் வேற்றுமைகளை அகற்றி சமரசப்படுத்தல் ஆகும"

**- ஜவஹர்லால் நேரு**

**ஜனாதிபதியின் பதவி நீக்கம் (சரத்து 61-ன் கீழ் சிறப்பு பெரும்பான்மை)**

- குடியரசுத் தலைவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை இந்திய நாடாளுமன்றத்தின் எந்த அவையும் தொடங்கலாம்.

- பதவி நீக்கக் குற்றச்சாட்டை முன்வைத்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் நான்கில் ஒரு பங்கினர் குற்றச்சாட்டில் கையெழுத்திட வேண்டும் மற்றும் 14 நாட்களுக்கு ஒரு நோட்டீசை ஜனாதிபதியிடம் ஒப்படைக்க வேண்டும்.

❖ குற்றச்சாட்டைத் தொடங்கிய சபையின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் அது நிறைவேற்றப்பட்டவுடன் குற்றச்சாட்டுகளை விசாரிக்க மற்ற சபைக்கு குற்றச்சாட்டுத் தீர்மானம் அனுப்பப்படுகிறது

❖ விசாரணை மன்றத்தில் ஆஜராகும் உரிமையும், பிரதிநிதித்துவம் செய்யும் உரிமையும் ஜனாதிபதிக்கு உண்டு.

❖ எவ்வாறாயினும், மற்றைய சபையிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அன்றைய தினம் முதல் குடியரசுத்தலைவர் தனது பதவியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படும்.

**சரத்து 249-இன் கீழ் சிறப்புப் பெரும்பான்மை**

தேசிய நலன் கருதி மாநிலப் பட்டியலில் உள்ள ஒரு துறையின் மீது பாராளுமன்றம் சட்டமியற்றும் அதிகாரம்

மாநிலப்பட்டியலின் விதிகள் எதுவாக இருந்தாலும், தேசிய நலனுக்கு அவசியமானது அல்லது பொருத்தமானது என்று கருதி மாநிலங்களவையில் தீர்மானம் நிறைவேற்றப்படலாம். இவ்வாறு மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களால் ஆதரிக்கப்படும் தீர்மானத்தின் மூலம் மாநிலங்களவையில் தீர்மானத்தில் உள்ள மாநிலப்பட்டியலின் எந்தவொரு துறையிலும், இந்தியாவின் முழு அல்லது எந்தப் பகுதிக்கும் பாராளுமன்றம் சட்டங்களை இயற்றுவது சட்டப்பூர்வமானது.

## முக்கிய சட்டதிருத்தங்கள்:

**i.** <u>மாநில மறுசீரமைப்பு:</u>

| அரசியலமைப்பு சட்ட திருத்த எண் மற்றும் ஆண்டு | அரசியலமைப்பில் ஏற்பட்ட திருத்தங்கள் |
|---|---|
| 7 வது அரசியலமைப்பு சட்டதிருத்தம் 1956 | 1. மாநிலங்கள் பகுதி A, பகுதி B, பகுதி C பகுதி D ஆக பகுக்கப்பட்டது நீக்கப்பட்டது<br>2. 14 மாநிலங்கள் 6 யூனியன் பிரதேசங்களாக மறுசீரமைக்கப்பட்டது<br>3. மாநில உயர்நீதிமன்றத்தின் அதிகார வரம்பு யூனியன் பிரதேசங்கள் வரை நீட்டிக்கப்பட்டது<br>4. இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு பொதுவான உயர்நீதிமன்றம் அமைக்க வழிவகை செய்யப்பட்டது. |
| 10வது அரசியலமைப்பு சட்டதிருத்தம் 1961 | தாத்ரா மற்றும் நாகர் ஹவேலியை யூனியன் பிரதேசமாக முதலாம் அட்டவணையில் சேர்த்தது. |
| 12வது அரசியலமைப்பு சட்டதிருத்தம் 1962 | கோவா, டையூ, டாமன் ஆகியவற்றை இந்திய ஒன்றியத்தில் சேர்த்தது |
| 13வது அரசியலமைப்பு சட்டதிருத்தம் 1962 | நாகாலாந்து என்று தனியாக ஒரு மாநிலம் அமைத்து புதிதாக சிறப்பு விதி 371A சேர்ப்பு |
| 14வது அரசியலமைப்பு சட்டதிருத்தம் 1962 | புதுச்சேரியை யூனியன் பிரதேசமாக சேர்த்தது. இமாச்சல் பிரதேசம், மணிப்பூர், திரிப்புரா, கோவா, டையூ, டாமன் மற்றும் புதுச்சேரி ஆகியவற்றில் |

| | |
|---|---|
| | சட்டமன்றங்கள் மற்றும் அமைச்சர்கள் அவைகளையும் ஏற்படுத்த வழி வகுத்தது. |
| 22வது அரசியலமைப்பு சட்டதிருத்தம் 1961 | மேகாலயாவை அசாமின் தன்னாட்சி கொண்ட மாநிலமாக மாற்றியது. |
| 35வது அரசியலமைப்பு சட்டதிருத்தம் 1974 | சிக்கிம் பாதுகாப்பு மாநிலத்தை இந்தியாவின் ஓர் இணைப்பு மாநிலமாக சேர்த்தது. பின் அதற்காக பத்தாவது அட்டவணை சேர்ப்பு |
| 36வது அரசியலமைப்பு சட்டதிருத்தம் 1975 | சிக்கிம் இணைப்பு மாநிலம் என்பதை நீக்கி இந்தியாவின் முழு மாநிலமாக்கியது. பத்தாவது அட்டவணையை நீக்கியது. |
| 69வது அரசியிலமைப்பு சட்டதிருத்தம் 1991 | டெல்லி யூனியன் பிரதேசத்தை டெல்லி தேசிய தலைநகர் பிரதேசமாக மாற்றியது. |

### ii. ஆட்சி மொழி அலுவல் மொழிகள்

| அரசியலமைப்பு சட்ட திருத்த எண் மற்றும் ஆண்டு | அரசியலமைப்பில் ஏற்பட்ட திருத்தங்கள் |
|---|---|
| 21வது அரசியிலமைப்பு சட்டதிருத்தம் 1967 | அட்டவணை VIII ல் சிந்தி மொழி சேர்ப்பு |
| 71வது அரசியிலமைப்பு சட்டதிருத்தம் 1992 | கொங்கனி, மணிப்பூரி, நேபாளி மொழிகள் சேர்ப்பு |
| 92வது அரசியிலமைப்பு சட்டதிருத்தம் 2003 | போடோ, டோக்ரி, மைதிலி, சாந்தலி மொழிகள் சேர்ப்பு |

### iii. கட்சி தாவல் தடைச்சட்டம் :

| அரசியலமைப்பு சட்ட திருத்த எண் மற்றும் ஆண்டு | அரசியலமைப்பில் ஏற்பட்ட திருத்தங்கள |
|---|---|
| 52வது அரசியிலமைப்பு சட்டதிருத்தம் 1985 (கட்சிதாவல் தடைச்சட்டம்) | நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சித் தாவல் காரணமாக தகுதியிழத்தல். இதன் விதிகள் 10வது அட்டவணையில் சேர்ப்பு |
| 91வது அரசியிலமைப்பு சட்டதிருத்தம் 2003 | 75 1A) – மத்திய அமைச்சர் குழுவின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை லோக்சபாவின் மொத்த உறுப்பினர்களில் 15% மிகக்கூடாது |

### iv. மற்ற முக்கிய சட்டத்திருத்தங்கள்

1. முதல் அரசியலமைப்பு சட்டத்திருத்தம், 1951 சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய வகுப்பினரின் முன்னேற்றத்திற்காக சிறப்பு ஏற்பாடுகளை செய்ய அரசுக்கு அதிகாரம் அளித்து, ஒன்பதாவது அட்டவணையை சேர்த்தது.

2. **பதினாறாவது அரசியலமைப்பு சட்டத்திருத்தம்**, 1963 இந்திய ஒன்றியத்திலிருந்து மாநிலங்கள் பிரிவதைத் தடுக்கிறது

| | | |
|---|---|---|
| 3. | 24வது அரசியிலமைப்பு சட்டதிருத்தம் 1971 | - அரசியமைப்பின் எந்த ஒரு பகுதியினையும் (அடிப்படை உரிமைகளையும்) சட்டதிருத்தம் செய்வதற்கான அதிகாரத்தையும் நடைமுறையையும் நாடாளுமன்றம் கொண்டுள்ளது.<br>- அரசியலமைப்பு சட்டதிருத்த மசோதாவிற்கு குடியரசுத்தலைவர் கட்டாயம் ஒப்புதல் அளிக்க வேண்டும். |
| 4. | 25 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம், 1971 | - சொத்துரிமையை அடிப்படை உரிமைகளிலிருந்து நீக்கியது.<br><br>- சரத்து 39 (b) அல்லது (c) இல் உள்ள அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட எந்தவொரு சட்டமும், சரத்துகள் 14, 19 மற்றும் 31-ன் மூலம் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறும் அடிப்படையில் நீதிமன்றத்தில் வழக்கிட முடியாது. |
| 5. | 26வது அரசியலமைப்பு சட்டதிருத்தம் 1971 | சுதேச அரசுகளின் முன்னாள் ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்ட தலைப்புகள் மற்றும் சிறப்பு சலுகைகள் (தனி ஏற்பாடு) நீக்கப்பட்டது. |
| 6. | 42வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 1976<br><br>சிறு அரசியலமைப்பு | ‘சமயச் சார்பற்ற’ சமதர்ம மற்றும் ‘ஒருமைப்பாடு’ என்ற சொற்கள் முகப்புரையில் புதியனவாகச் சேர்க்கப்பட்டன.<br>- நாற்பத்து இரண்டாம் சட்டத்திருத்தத்தின் சிறப்புக் பகுதி IV-A யைச் சேர்த்ததாகும். இந்தப் புதிய பகுதி, குடிமக்களுக்கான பத்து அடிப்படைக் கடமைகளை வலியுறுத்துகிறது. இவற்றை சரத்து 51A கொண்டுள்ளது<br><br>1971 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் 2001 வரை மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளின் இடங்களை முடக்கியது.<br><br>நிர்வாக தீர்ப்பாயங்கள் மற்றும் பிற தீர்ப்பாயங்களை உருவாக்கியது. ஐந்து துறைகளை மாநில பட்டியலிலிருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றியது. |
| 7. | 44வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 1978 | 42வது திருத்தச் சட்டம், 1976 மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு திருத்தங்களை ரத்து செய்ய ஜனதா அரசால் இயற்றப்பட்டது. |
| 8. | 61வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 1988 | இச் சட்டத்திருத்தம் வாயிலாக சரத்து 326 திருத்தப்பட்டு வாக்களிக்கும் வயது 21 லிருந்து 18 ஆக குறைக்கப்பட்டது. |
| 9. | 73வது மற்றும் 74வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 1992 | ஊராட்சி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசியலமைப்பு அங்கீகாரத்தை வழங்கியது. |
| 10. | 76வது அரசியலமைப்பு | இது தமிழ்நாடு இடஒதுக்கீடு சட்டத்தை |

| | | |
|---|---|---|
| | திருத்தம், 1994 | (மாநிலத்தில் 69 சதவீத இடஒதுக்கீட்டை வழங்குகிறது) அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் கீழ் கொண்டு வர இயற்றப்பட்டது. |
| 11 | . 86வது அரசியலமைப்பு சட்டதிருத்தம் 2002 | புதிய உறுப்பாகிய 21A, கல்விக்கான உரிமையை வழங்குகிறது. ஆறு வயது முதல் பதிநான்கு வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்குமான இலவச மற்றும் கட்டாய கல்விக்கு இது வழி வகுக்கிறது. |
| 12. | 93வது அரசியலமைப்பு சட்டதிருத்தம் 2005 | கல்வி நிறுவனங்களில் சேர்க்கைக்காக சமூக மற்றும் கல்விவழி பின்தங்கியவர்களுக்கும் பட்டியலினத்தோர் / பழங்குடியினருக்கும் அவர்களது மேம்பாட்டிற்காக சட்டம் வாயிலாக சிறப்பு வகைபாடுகளை அரசு செய்ய எற்படும். |
| 13. | 99வது அரசியலமைப்பு சட்டதிருத்தம் 2014 | தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் உருவாக்கம். இது உச்சநீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டது. |

**சமீபத்திய சட்டத்திருத்தங்கள்**

| திருத்தச் சட்டம் | விளக்கம் | திருத்தத்-திற்கான மசோதா | அமல்-படுத்தப்பட்ட நாள் | திருத்தங்கள் |
|---|---|---|---|---|
| 101வது திருத்தம் | சரக்கு மற்றும் சேவை வரியை அறிமுகப்படுத்தியது | 122வது திருத்த மசோதா | 1 ஜூலை 2017 | சரத்துகள் 246A, 269A, 279A சேர்க்கப்பட்டது. சரத்து 268A நீக்கப்பட்டது. சரத்துகள் 248, 249, 250, 268, 269, 270, 271, 286, 366, 368, ஆறாவது அட்டவணை மற்றும் ஏழாவது அட்டவணை ஆகியவை திருத்தப்பட்டன. |
| 102வது திருத்தம் | தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு அரசியலமைப்பு அங்கீகாரம் | 123வது திருத்த மசோதா | 11 ஆகஸ்ட் 2018 | சரத்துகள் 338B, 342A மற்றும் பிரிவு 26C சேர்க்கப்பட்டது. சரத்து 340 நீக்கப்பட்டது. சரத்துகள் 338, 366 திருத்தப்பட்டன. |
| 103வது திருத்தம் | பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு 10% இட ஒதுக்கீடு | 124வது திருத்த மசோதா | 12 ஜனவரி 2019 | சரத்து 15 திருத்தப்பட்டு, பிரிவு [6] சேர்க்கப்பட்டது. சரத்து 16 திருத்தப்பட்டு பிரிவு [6] சேர்க்கப்பட்டது. |

APOLLO STUDY CENTRE

| | | | | |
|---|---|---|---|---|
| 104வது திருத்தம் | மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளில் எஸ்சி மற்றும் எஸ்டிகளுக்கான இட ஒதுக்கீட்டை எழுபது ஆண்டுகளில் இருந்து எண்பது ஆண்டுகளாக நீட்டிக்கிறது. | 126வது திருத்த மசோதா | 25 ஜனவரி 2020 | சரத்து 334 திருத்தப்பட்டது |
| 105வது திருத்தம் | சமூகம் மற்றும் கல்வியில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை (OBC) அங்கீகரிக்கும் அதிகாரத்தை மாநில அரசுகளுக்கு மீண்டும் வழங்குகிறது.<br><br>இந்தத் திருத்தம் 11 மே 2021 அன்று மத்திய அரசுக்கு மட்டுமே அதிகாரமளித்து வழங்கப்பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ரத்து செய்கிறது. | 127வது திருத்த மசோதா | 10 ஆகஸ்ட் 2021 | சரத்துகள் 338B, 342A மற்றும் 366 திருத்தப்பட்டன. |

APOLLO STUDY CENTRE

## பெண்களுக்கு அதிகாரமளித்தல்

பாலின வேறுபாடு, மதம் மற்றும் சமூக அந்தஸ்து ஆகியவற்றின் அடிப்படையில் எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் பெண்களுக்கு பொருளாதார, சமூக மற்றும் கல்வி உரிமைகளை வழங்குதல்.

**பெண்களின் உரிமைகள்:**

பெண்களுக்குக் கிடைக்கும் உரிமைகளை அரசியலமைப்பு உரிமைகள் மற்றும் சட்ட உரிமைகள் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

அரசியலமைப்பு உரிமைகள் என்பது அரசியலமைப்பின் பல்வேறு விதிகளில் வழங்கப்பட்டுள்ளவை ஆகும். சட்ட உரிமைகள் என்பது பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களில் நிறைவேற்றப்படும் பல்வேறு சட்டங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ளவை ஆகும்.

**அரசியலமைப்பு உரிமைகள்:**

1. சரத்து 15(1) பாலின அடிப்படையில் பாரபட்சமாக நடத்துவதை தடை செய்கிறது.

2. பெண்களுக்கு ஆதரவாக சிறப்பு சலுகைகள் உருவாக்க அரசிற்கு அனுமதி அளித்தல் (15 (3))

3. ஆண், பெண் என்ற பாகுபாடு இன்றி அனைவருக்கும் சமமாக போதுமான வாழ்க்கை நிலைக்கு சமஉரிமை உண்டு (39(a))

4. ஆண், பெண் இருவருக்கும் சம வேலைக்கான சம ஊதியம் இருக்க வேண்டும் (39(d) )

5. **73 மற்றும் 74 அரசியலமைப்பு சட்டத்திருத்தம், 1992**

- ❖ ஒவ்வொரு ஊராட்சியிலும் நேரடித் தேர்தல் மூலம் நிரப்பப்படும் இடங்களில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு (சரத்து 243D (3))
- ❖ ஊராட்சியின் அனைத்து நிலையிலும் மொத்த தலைவர் பதவிகளில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்க இட ஒதுக்கீடு (சரத்து 243D(4))

**சட்ட உரிமைகள்:**

- ❖ குடும்ப வன்முறை பாதுகாப்புச் சட்டம் - 2005
- ❖ பெண்களை தவறாக சித்தரித்தல் தடை சட்டம் - 1986
- ❖ சதி ஒழிப்புச் சட்டம் - 1987
- ❖ வரதட்சணை தடைச்சட்டம் - 1961
- ❖ பேறுகால பயன்சட்டம் - 1961
- ❖ சம ஊதியச் சட்டம் - 1976
- ❖ கருவில் இருக்கும் குழந்தையின் பாலினை அறியத் தடைச் சட்டம் - 1994
- ❖ முஸ்லீம் திருமண கலைப்பு சட்டம் - 1986
- ❖ குடும்ப நீதிமன்ற சட்ம் - 1984
- ❖ இந்திய தண்டனைச் சட்டம் - 1860
- ❖ குற்றவியல் நடைமுறை குறியீடு – 1973
- ❖ இந்திய கிறித்துவ திருமணச்சட்டம் - 1872
- ❖ சட்ட உரிமைகள் அதிகாரச் சட்டம் - 1987
- ❖ இந்து திருமணச் சட்டம் - 1955
- ❖ இந்து வாரிசுரிமைச் சட்டம் - 1956
- ❖ குறைந்த பட்ச ஊதியச் சட்டம் - 1948
- ❖ சுரங்கச் சட்டம் (1952) தொழிற்சாலைச் சட்டம் - 1948
- ❖ தேசிய பெண்கள் ஆணையச் சட்டம் - 1990
- ❖ பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல் எதிரான சட்டம் - 2013

- ❖ பரத்தமைத் தடுப்புச் சட்டம் (1956)
- ❖ மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு சட்டம் (1971)
- ❖ முஸ்லீம் பெண்கள் (விவாகரத்து மீதான உரிமைகள் பாதுகாப்பு) சட்டம் (1986)
- ❖ முஸ்லீம் பெண்கள் (திருமண உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019 இதில் முத்தலாக் நடைமுறை சட்டவிரோதமானது என்று அறிவிக்கப்பட்டது.

பின்வரும் பிற சட்டங்களில் பெண்களுக்கான சில உரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் உள்ளன:

i. பணியாளர்கள் அரசு காப்பீடு சட்டம் (1948)
ii. தோட்டத் தொழிலாளர் சட்டம் (1951)
iii. வழக்குரைஞர்கள் (பெண்கள்) சட்டம் (1923)
iv. பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் (1936)
v. இந்திய சாட்சியச் சட்டம் (1872)

**பெண்ணியம்**

பெண்ணியம் என்பது ஆண்களுக்கு சமமாக பெண்களின் அதிகாரத்தை மேம்படுத்துவதற்கு முயற்சிக்கும் இயக்கங்கள் மற்றும் கருத்தியல்களைக் குறிக்கிறது.

இந்த இயக்கம் 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தொடங்கியது. இது ஆண்களுக்கு சமமான பெண்களின் உள்ளார்ந்த திறன் பற்றிய அறிவியல் உணர்தலால் உந்தப்பட்டது.

**பெண் கல்வி**

1848 ஆம் ஆண்டு தனது கணவர் ஜோதிராவ் பூலேவுடன் இணைந்து திறக்கப்பட்ட முதல் பெண்கள் பள்ளியின் முதல் பெண் ஆசிரியர் சாவித்ரிபாய் பூலே ஆவார்.

**அரசியல் பங்கேற்பு**

மக்களவை மற்றும் மாநில சட்டப் பேரவைகளில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு அளிக்கும் முதல் மகளிர் இடஒதுக்கீடு மசோதா 81வது அரசியலமைப்பு திருத்த மசோதாவாக செப்டம்பர் 1996 இல் தேவகவுடா தலைமையிலான அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.

**பாராளுமன்றத்தில் பெண்களுக்கு 33மூ இட ஒதுக்கீடு வழங்கும் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா**

- மக்களவை மகளிர் இடஒதுக்கீடு மசோதா - அரசியலமைப்பு (நூற்று இருபத்தி எட்டாவது திருத்தம்) மசோதா, 2023 - கிட்டத்தட்ட ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது: ஆதரவாக 454 வாக்குகள் மற்றும் எதிராக இரண்டு வாக்குகள்.

- மத்திய அமைச்சரவை மகளிர் இடஒதுக்கீடு மசோதாவுக்கு ஒப்புதல் அளித்ததன் மூலம் வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கையை எடுத்துள்ளது, லோக்சபா மற்றும் மாநில சட்டசபைகளில் மூன்றில் ஒரு பங்கு இடங்கள் பெண் வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்படும்.
- இந்த ஏற்பாடு பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதையும், இந்தியாவின் சட்டமன்ற அமைப்புகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- நியாயம் மற்றும் சமமான பங்கீட்டை உறுதி செய்வதற்காக, ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்குப் பிறகும் ஒதுக்கப்பட்ட இடங்கள் சுழற்சி முறையில் மாற்றப்படும். குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் அல்லது தனிநபர்களால் ஒதுக்கப்பட்ட இடங்களை ஏகபோகமாக்குவதை இந்த வழிமுறை தடுக்கிறது.

- ❖ பட்டியலிடப்பட்ட சாதிகள் (எஸ்சி), பழங்குடியினர் (எஸ்டி) மற்றும் ஆங்கிலோ-இந்தியர்களுக்கு 33 சதவீத ஒதுக்கீட்டிற்குள் துணை இடஒதுக்கீட்டையும் மசோதா முன்மொழிகிறது.

**தேசிய மகளிர் ஆணையம் (NCW)**

பெண்களுக்கான தேசிய ஆணையம் 1992 ஆம் ஆண்டு தேசிய மகளிர் ஆணையச் சட்டம், 1990 மூலம் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக அமைக்கப்பட்டது. இது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

**அமைப்பு**

இது ஒரு தலைவர், ஐந்து உறுப்பினர்கள் மற்றும் ஒரு உறுப்பினர் செயலாளரைக் கொண்டுள்ளது. இந்த ஆணையத்தின் அனைத்து உறுப்பினர்களும் மூன்று ஆண்டு பதவி காலத்துடன் மத்திய அரசால் நியமிக்கப்படுவார்கள்.

தேசிய மகளிர் ஆணையத்தின் தற்போதைய தலைவர் திருமதி. ரேகா ஷர்மா ஆவார். அவர் ஆகஸ்ட் 7, 2018 அன்று தலைவியாக பொறுப்பேற்றார். மற்ற உறுப்பினர்கள் 1) குஷ்பு சுந்தர், 2) டெலினா கோங்துப், 3) மம்தா குமாரி மற்றும் 4) மீனாட்சி நேகி.

**பரிவாரிக் மகிளா லோக் அதாலத்** (குடும்ப மகளிர் விரைவு சிறப்பு நீதிமன்றம்)

தேசிய ஆணையம் பரிவாரிக் மகிளா லோக் அதாலத் (PMLA) என்ற புதுமையான அமைப்பை உருவாக்கியுள்ளது. இது பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள திருமணம் மற்றும் குடும்ப விவகாரங்கள் தொடர்பான வழக்குகளை விரைவாகத் தீர்ப்பதற்கு, மாவட்ட சட்ட சேவைகள் ஆணையத்திற்கு (DLSA) துணைபுரிகிறது.

பரிவாரிக் மகிளா லோக் அதாலத்தானது லோக் அதாலத்தின் (மக்கள் நீதிமன்றம்) மாதிரியில் செயல்படுகிறது. இந்த அமைப்பை ஒழுங்கமைக்க தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மாநில மகளிர் ஆணையங்கள் அல்லது மாநில சட்ட சேவைகள் ஆணையங்களுக்கு தேசிய மகளிர் ஆணையம் நிதி உதவி வழங்குகிறது.

**தமிழ்நாடு மாநில பெண்களுக்கான புதிய கொள்கை 2021** - இந்தக் கொள்கை ஐந்தாண்டுகளுக்கு செயல்படுத்தப்பட உள்ளது.

**பெண்கள் மேம்பாட்டிற்கான தேசியக் கொள்கை :**
பெண்கள் மேம்பாட்டிற்கான தேசியக் கொள்கையானது 2001-ம் ஆண்டு ஏற்கப்பட்டது

**தகவல்கள்**

- ❖ பெண்களுக்கு "வாக்களிக்கும் உரிமை" வழங்கிய முதல் நாடு - நியூசிலாந்து

- ❖ **பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கான பாராளுமன்றக் குழு**

  30 உறுப்பினர்களைக் கொண்டுள்ள இக்குழு (லோக்சபாவிலிருந்து 20 மற்றும் ராஜ்யசபாவில் இருந்து 10) 1997 இல் உருவாக்கப்பட்டது. இது தேசிய மகளிர் ஆணையத்தின் அறிக்கைகளை பரிசீலித்து, அனைத்து துறைகளிலும்

பெண்களின் நிலை, கண்ணியம் மற்றும் சமத்துவத்தைப் பாதுகாக்க மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை ஆய்வு செய்கிறது.

- ஐ.நா சபையானது 1978 ஐ சர்வதேச பெண்கள் ஆண்டாக அறிவித்தது.

- பெண்களுக்கான ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு நிதியம் (ருஜேகுநுஆ) 1995 முதல் பெய்ஜிங் செயல்பாட்டிற்கான தளத்தை செயல்படுத்துகிறது.

- தேசிய மகளிர் ஆணையத்தின் முதல் தலைவர் திருமதி ஜெயந்தி பட்நாயக் (1992)

- பணியிடங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல் (பாதுகாப்பு, தடுப்பு மற்றும் குறைதீர்வு) சட்டம், 2013

**உலகில் முதல் பெண்கள்**

| | | |
|---|---|---|
| பிரதமர் | ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா | இலங்கை |
| விண்வெளியில் | வேலண்டினா தெரேஷகோவா | சோவியத் ஒன்றியம் |
| எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தவர் | ஜுன்கோ தபேய் | ஜப்பான் |
| ஒலிம்பிக் தங்கம் வென்றவர் | சார்லட் கூப்பர் | இங்கிலாந்து |

**இந்தியாவில் முதல் பெண்கள்**

- முதல் மகளிர் பல்கலைக்கழகம் - SNDT பல்கலைக்கழகம் - 1916 இல் ஐந்து மாணவர்களுடன் புனேவில் மகரிஷி கர்வேயால் தொடங்கப்பட்டது.
- மத்திய அமைச்சரவைப் பதவியை வகித்த முதல் பெண் - விஜய லட்சுமி பண்டிட்
- மத்திய வெளியுறவுத்துறை அமைச்சராக பதவி வகித்த முதல் பெண் - சுஷ்மா ஸ்வராஜ் (2014)
- சுதந்திர இந்தியாவின் முதல் பெண் ஆளுநர் - சரோஜினி நாயுடு
- ஐநா பொதுச் சபையின் முதல் பெண் தலைவர் - விஜய லட்சுமி பண்டிட் (1953)
- இந்தியாவின் முதல் பெண் நிதியமைச்சர் - நிர்மலா சீதாராமன்

# நுகர்வோர் பாதுகாப்பு

**1. நுகர்வோர்**

**நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்படி (1986) நுகர்வோர் என்பவர்:**

ஒரு பொருளை வாங்குதல் அல்லது ஒரு சேவையைப் பெறுவதற்காக

- பணம் செலுத்தியவர்
- வாக்குறுதி வழங்கியவர்
- ஓரளவு பணம் செலுத்தி ஓரளவு வாக்குறுதி வழங்கியவர்

**நுகர்வோர் பாதுகாப்பு:**

நுகர்வோர் பாதுகாப்பு என்பது நுகர்வோரின் உரிமைகள், நியாயமான வர்த்தகம், போட்டி மற்றும் துல்லியமான தகவல்கள் சந்தையில் இருக்க வேண்டும் என்பதற்காக இயற்றப்பட்ட சட்டங்களின் தொகுப்பு ஆகும்.

”வாங்குபவர் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்” என்று பொருள்படும் “கேவியட் எம்ப்டார்“ என்ற முந்தைய அணுகுமுறை, தற்போது “விற்பனையாளர் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்“ என்று பொருள்படும் “கேவியட் வென்டிட்டர்“ ஆக மாற்றப்பட்டுள்ளது.

**2. அடிப்படை நுகர்வோர் உரிமைகள்**

நுகர்வோர் உரிமை என்பது ”பொருட்கள் அல்லது சேவைகளின் தரம், தூய்மை, விலை மற்றும் தரநிலை பற்றிய தகவல்களைப் பெறுவதற்கான உரிமை” என்று விளக்கப்படுகிறது.

**3. நுகர்வோர் நலன் பாதுகாப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் வழிகாட்டி நெறிமுறைகள்:**

ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச்சபை ஏப்ரல் 9, 1985 அன்று அதன் உறுப்பு நாடுகள் நுகர்வோர் நலன் பாதுகாப்பில் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகள் மற்றும் சட்டங்கள் குறித்து வழிகாட்டி நெறிமுறைகளை உள்ளடக்கிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

**4. நுகர்வோர் பாதுகாப்பு குழு**

இது நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் 1972 இல் நிறுவப்பட்டது. இதில் மொத்தம் 20 உறுப்பினர்கள் உள்ளனர் மற்றும் அனைவரும் பிரதமரின் ஆலோசனையின் பேரில் இந்திய குடியரசு தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள். உறுப்பினர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும் மேலும் அவர்கள் வருடத்திற்கு ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.

**5. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் - 1986 (COPRA)**

நுகர்வோர் குறைகளைத் தீர்ப்பதற்காக நுகர்வோர் கவுன்சில்கள் மற்றும் பிற அதிகாரிகள் நுகர்வோர் தொடர்புடையவர்களோடு நுகர்வோருக்கு உதவும் வகையில் இச்சட்டம் அக்டோபர் 1986இல் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு 1986 டிசம்பர் 24 முதல் இந்தியாவில் நடைமுறைக்கு வந்தது.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் ‘‘நுகர்வோருக்கான மகா சாசனம்’’ என்று அழைக்கப்படுகிறது. இச்சட்டத்தின் வாயிலாக நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள், பொருட்களின் குறைபாடுகள் மற்றும் சேவைகளில் உள்ள குறைகளை சரிபார்க்க நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் அவசியமாகிறது.

நுகர்வோர் கோரும் இழப்பானது, ‘சேவை குறைபாடு’ அல்லது ‘பொருட்களின் குறைபாடு’ காரணமாக இருக்க வேண்டும்.

இச்சட்டம் புதிய உரிமைகளை வழங்கவில்லை. ஆனால் சர்ச்சைகளைத் தீர்க்கும் புதிய முறையாக உருவெடுத்துள்ளது.

**குறை தீர்க்கும் செயல்முறை**

**நுகர்வோர் பாதுகாப்பு குழுக்கள்**, விழிப்புணர்வு மூலம் நுகர்வோரின் உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நிறுவப்பட்டுள்ளன.

**6. இந்தியாவில் நுகர்வோர் நீதிமன்றங்கள்**

இந்த சட்டம் மூன்று அடுக்கு, நீதிமுறை-சார்புடைய நுகர்வோர் தகராறு தீர்க்கும் செயல்முறையை நிறுவுகிறது.

**1. மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம்**

மாநில அரசு தேவை என்று கருதினால் ஒரே மாவட்டத்திற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்ட மன்றங்களை அமைக்கலாம் .

**தலைவர்** - மாவட்ட நீதிபதியின் தகுதி
**அதிகார வரம்பு** - ₹20 லட்சத்திற்கும் குறைவாக (தற்போது ₹1 கோடி)

**2. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்**

மத்திய அரசுடன் கலந்தாலோசித்து மாநில அரசு நியமிக்க வேண்டும்.

**தலைவர்** - உயர் நீதிமன்றத்தின் தற்போதைய அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி
**அதிகார வரம்பு** - ரூ.20 லட்சத்திற்கு மேல் மற்றும் ஒரு கோடிக்கு கீழ் (தற்போது ஒரு கோடி முதல் 10 கோடி வரை)
**மேல்முறையீடு** - தேசிய ஆணையத்தில் 30 நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும்.

**3. தேசிய நுகர்வோர் தகராறு தீர்வு ஆணையம்**

இது COPRA 1986 இன் கீழ் 1988 இல் அமைக்கப்பட்ட நீதிமுறை-சார்புடைய ஆணையமாகும். இதன் தலைமை அலுவலகம் புது தில்லியில் உள்ளது.

**அமைப்பு**

இது உச்ச நீதிமன்றத்தின் தற்போதைய (அல்லது) ஓய்வு பெற்ற நீதிபதியின் தலைமையில் உள்ளது. மேலும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டுள்ளது, ஒரு நீதித்துறையைச் சேர்ந்த மற்றும் ஒரு பெண் உறுப்பினர் இருக்க வேண்டும்.

**அதிகார வரம்பு** - ஒரு கோடிக்கு மேல் (தற்போது 10 கோடி)

**மேல்முறையீடு** - உச்ச நீதிமன்றத்தில் 30 நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும்.

தற்போது, இந்தியாவில் சுமார் 678க்கும் மேற்பட்ட மாவட்ட மன்றங்கள் மற்றும் 35 மாநில ஆணையங்கள் உள்ளன.

**7. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் - 2019**

இந்திய பாராளுமன்றத்தில் ஆகஸ்ட் 2019ஆம் ஆண்டு ஒரு மைல்கல் என்று அழைக்கப்படும் நுகர்வோர் பாதுகாப்பு மசோதோ, 2019-இல் நிறைவேற்றப்பட்டது. இந்த நவீன தொழில்நுட்பகாலத்தில் நுகர்வோர்களின் குறைகளை குறித்த நேரத்திலும், பயனுள்ள நிர்வாகத்தையும், நியாயமான தீர்வையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டது. இது 20 ஜூலை 2020 முதல் நடைமுறைக்கு வந்தது.

**புதிய சட்டத்தின் சிறப்பும்சங்கள்**

**1. இ - வணிக பரிவர்த்தனைகள்:**

புதிய சட்டம் நுகர்வோர் என்ற வரையறையை இணைய நுகர்வோருக்கும் விரிவுபடுத்தியுள்ளது.

**2. பணவியல் அதிகார வரம்பை மேம்படுத்துதல்:**

புதிய சட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட பண வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டன.

**3. புகார்களை மின்னணு முறையில் தாக்கல் செய்தல்:**

புதிய சட்டம் நுகர்வோருக்கு மின்னணு முறையில் புகார்களைத் தாக்கல் செய்வதற்கும் ஒளிகாட்சித் கலந்தாய்வுக் கூடம் (Video Conferencing) மூலம் வாதிகளைக் கேட்பதற்கும் அல்லது ஆய்வு செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

**4. மத்திய நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரத்தை நிறுவுதல்:**

மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்திற்கு ஒரு தலைமை இயக்குநர் பாதுகாப்பு ஆணையத்திற்கு ஒரு தலைமை இயக்குநர் தலைமையில் ஒரு விசாரணைப் பிரிவு இருக்கும்.

**5. நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள்:**

புதிய சட்டம் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளுக்கு விரிவான வரையறையை அறிமுகப்படுத்துகிறது.

**6. தவறான விளம்பரத்திற்கு அபராதம்:**

தவறான விளம்பரத்திற்காக மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் ஒரு உற்பத்தியாளர் அல்லது ஒப்புதல் அளிப்பவருக்கு 10,00,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கலாம். அடுத்தடுத்த குற்றத்தில் அபராதம் 5,000,000 ரூபாய் மற்றும் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

**8. முக்கியமான நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்கள்**

- சட்டஅளவீட்டு சட்டம், 2009
- இந்திய தர நிர்ணய பணியகம், 1986
- அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955
- கறுப்பு சந்தைப்படுத்துதல் தடுப்பு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் பராமரிப்பு பொருட்களின் சட்டம், 1980


APPOLO STUDY CENTRE

- உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம், 1954
- எடைகள் மற்றும் அளவீடுகள் சட்டம், 1958
- இந்திய தரநிலை நிறுவனம் (சான்றளிப்பு) சட்டம், 1952
- இந்தியத் தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் சட்டம், 1986
- இந்திய ஒப்பந்தச் சட்டம், 1982
- சரக்கு விற்பனைச் சட்டம், 1982

**9. நுகர்வோர் விழிப்புணர்வுக்கான தன்னார்வ அமைப்புகள்**

**1. நுகர்வோர் நல நிதி (CWF)**

இந்தியாவில் நுகர்வோருக்கான இயக்கத்தை வலுப்படுத்த நுகர்வோர் விவகாரத் துறையின்கீழ் இது செயல்படுகிறது.

**2. தன்னார்வ நுகர்வோர் அமைப்பு (VCO)**

சரக்கு மற்றும் சேவைகளை ஒப்புமை சோதனை செய்து அதன் முடிவுகளை வெளியிடுகிறது. நுகர்வோர் நல நிதி மானியங்கள் மூலம் இதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

**3. நுகர்வோர் கூட்டமைப்பின் சர்வதேச அமைப்பு (IOCU)**

இது முதன்முதலில் 1960 இல் எல்லை தாண்டிய விழிப்புணர்வின் மூலம் அறிவைப் பகிர்ந்து கொள்ள நிறுவப்பட்டது. இது 120 நாடுகளில் 250 உறுப்பினர் அமைப்புகளைக் கொண்டுள்ளது. இதன் தலைமை அலுவலகம் இங்கிலாந்தின் லண்டனில் உள்ளது.

**Toll Free Number for Consumer Protection in India: 1800-11-4000 or 14404**

# மனித உரிமைகள்

மனிதர்களாக இருப்பதால் மட்டுமே மனிதர்களுக்கு உரிய உரிமைகளே மனித உரிமைகள் எனப்படும். இவை அனைத்து மனிதர்களுக்குமான பறிக்க இயலாத எவ்வகையிலும் மீற முடியாத உரிமைகள் ஆகும். அவை மனித குலத்திற்கே உரிய கண்ணியத்தில் இருந்து தோன்றியவை. மனித குலம் தொடர்ந்து நிலைக்கவும், மனித மேம்பாட்டுக்கும் இவை இன்றியமையாதவை.

**மனித உரிமைகள் ஆவணங்களின் எழுதப்பட்ட முன்னோடிகள்**

1. சைரஸ் உருளை (சாசனம்) (கிமு 539)
2. 1215 இன் மகா சாசனம் (இங்கிலாந்து)
3. 1689 ஆம் ஆண்டின் ஆங்கில உரிமைகள் மசோதா
4. பிரெஞ்சு உரிமைகள் பிரகடனம் (மனிதர்கள் மற்றும் குடிமக்களின் உரிமைகள் பிரகடனம் 1789)
5. அமெரிக்க அரசியலமைப்பு மற்றும் உரிமைகள் மசோதா (1791)

**மனித உரிமைகள் குறித்த உலகப் பிரகடனம் (UDHR):**

10 டிசம்பர் 1948-ல் ஐ.நா. பொதுச்சபை மனித உரிமைகள் குறித்த உலகப் பிரகடனத்தை பாரிஸ் நகரில் இயற்றி ஏற்றது. அனைத்து மனிதர்களுக்கும் உரிமையுள்ள மனித உரிமைகள் குறித்து முதலாவது சர்வதேச எண்ண வெளியீடு இந்தப் பிரகடனம். இது “சர்வதேச மகா சாசனம்” என்றழைக்கப்பட்டது.

எலினோர் ரூஸ்வெல்ட்டின் வழிகாட்டுதலின் கீழ் ஐநா மனித உரிமைகள் ஆணையத்தால் இது சாத்தியமானது. டிசம்பர் 10 மனித உரிமைகள் தினம் அல்லது சர்வதேச மனித உரிமைகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

இப்பிரகடனத்தில் 30 ஷரத்துக்கள் உள்ளன. இவை நான்கு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :

முதல் இரண்டு ஷரத்துக்கள் அனைத்து மனித உரிமைகளின் அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டுள்ளன. இந்த ஷரத்துக்கள் கூறுவது :

**ஷரத்து 1 :**

எல்லா மனிதர்களும் சுதந்திரமாகவும் சமமான கண்ணியம் மற்றும் உரிமைகளுடனும் பிறந்தவர்கள்.

**ஷரத்து 2 :**

ஒவ்வொருவரும் அனைத்து மனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்துக்கு உரிமை உள்ளவர்கள். இதில் இனம், நிறம், பாலினம், மொழி, சமயம், அரசியல் மற்றும் இதர கருத்துக்கள், நாடு அல்லது சமூகத் தோற்றம், சொத்துக்கள், பிறப்பு அல்லது இதர அந்தஸ்து என்ற எந்தப் பாகுபாடும் இதில் இல்லை.

ஷரத்துக்கள் 3 முதல் 21 வரை குடிமை மற்றும் அரசியல் உரிமைகளைப் பற்றியவை. அவை வருமாறு :

**ஷரத்து 3 :**

வாழ்வதற்கும், சுதந்திரத்திற்கும், பாதுகாப்புக்குமான உரிமை

**ஷரத்து 4 :**

அடிமைத்தனம், கட்டாய வேலை ஆகியவற்றிலிருந்து விடுதலை

**ஷரத்து 5 :**

சித்திரவதை மனிதாபிமானமற்ற தண்டனை ஆகியவற்றிலிருந்து விடுதலை

**ஷரத்து 6 :**

சட்டத்தின் கீழ் ஒரு மனிதன் என்ற அங்கீகாரம் பெறும் உரிமை

**ஷரத்து 7 :**

சட்டத்தின் முன் சமத்துவம் பெற உரிமை

APOLLO STUDY CENTRE

**ஷரத்து 8 :**

நீதித் தீர்வுகள் பெறுவதற்கான உரிமை

**ஷரத்து 9 :**

நியாயமற்ற கைது அல்லது நாடு கடத்தல் ஆகியவற்றிலிருந்து விடுதலை

**ஷரத்து 10 :**

நியாயமான விசாரணை, பொது விசாரணை ஆகியவற்றுக்கு உரிமை

**ஷரத்து 11 :**

குற்றவாளி என நிரூபிக்கப்படும் வரை நிரபராதி எனக் கருதப்படுவதற்கான உரிமை

**ஷரத்து 12 :**

தனியுரிமை மற்றும் சுயமரியாதை உரிமை

**ஷரத்து 13 :**

சுதந்திரமான நடமாட்டத்திற்கான உரிமை

**ஷரத்து 14 :**

தஞ்சம் கோருவதற்கான உரிமை

**ஷரத்து 15 :**

தேசத்தவர் என்பதற்கான உரிமை

**ஷரத்து 16 :**

திருமணத்திற்கும், குடும்பப் பாதுகாப்புக்குமான உரிமை

**ஷரத்து 17 :**

சொத்துக்களை உடைமையாக்க உரிமை

**ஷரத்து 18 :**

சிந்தனை, மனசாட்சி மற்றும் சமய உரிமை

**ஷரத்து 19 :**

கருத்துக் சுதந்திரம், அதனை வெளியிடுதல் மற்றும் தகவல் பெறும் உரிமை

**ஷரத்து 20 :**

அமைதியான கூட்டம் நடத்துதல், சங்கம் அமைத்தலுக்கு உரிமை

**ஷரத்து 21 :**

அரசில் பங்கேற்க உரிமை மற்றும் பொதுச் சேவைகளைப் பெற சமமான உரிமை

**சரத்து 22 முதல் 27 வரை பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அவை**

**ஷரத்து 22 :**

சமூகப் பாதுகாப்புக்கான உரிமை

**ஷரத்து 23 :**

பணி செய்ய உரிமை மற்றும் சமமான பணிக்கு சமமான ஊதியம் பெற உரிமை

**ஷரத்து 24 :**

ஓய்வு எடுக்கவும், பொழுதுபோக்குக்குமான உரிமை

**ஷரத்து 25 :**

உணவு, உடை, வீட்டு வசதி, மருத்துவ வசதி, சமூகச் சேவைகள் மற்றும் பாதுகாப்பு உட்பட ஆரோக்கியமான மன நல வாழ்வு மற்றும் போதுமான வாழ்க்கை தரத்திற்கான உரிமை.

**ஷரத்து 26 :**

கல்வி பெறும் உரிமை

**ஷரத்து 27 :**

சமுதாயத்தின் கலாச்சார வாழ்க்கையில் பங்கேற்கும் உரிமை

கடைசி மூன்று ஷரத்துக்களும் மேற்குறித்தமனித உரிமைகளை அனுபவிப்பதற்கான பின்னணிச் சூழ்நிலையை விவரிக்கின்றன.

APOLLO STUDY CENTRE

**ஷரத்து 28 :**

மேற்குறித்த உரிமைகளையும், மத சுதந்திரத்தையும் முழுவதுமாக பெறுவதற்கு சமூக, சர்வதேச ஒழுங்கிற்கு உரிமை உண்டு.

**ஷரத்து 29 :**

மேற்குறித்த உரிமைகள், சுதந்திரங்கள் ஆகியன இதர நபர்களின் உரிமைகள், சுதந்திரம் ஆகியவற்றை அங்கீகரித்து மதிப்பளிப்பதற்காகக் கட்டுப்படுத்தப்படுகின்றன. நன்னெறி நடத்தை, பொது அமைதி, பொது நலன் ஆகியவற்றின் தேவைகளை நிறைவு செய்யவும் இவை கட்டுப்படுத்தப்படுகின்றன.

**ஷரத்து 30 :**

மேற்குறித்த உரிமைகள், சுதந்திரங்கள் ஆகியவற்றை அழிப்பதை நோக்கமாகக் கொண்ட எச்செயலிலும் ஈடுபட எந்த நாட்டுக்கும், குழுவிற்கும், தனி நபருக்கும் உரிமை இல்லை.

**தகவல்கள்**

1. UDHR-ன் கொள்கைகள் பெரும்பாலான (185க்கும் மேற்பட்ட) நாடுகளின் அரசியலமைப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

2. UDHR, 500க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது

**சர்வதேச மனித உரிமைகள் மசோதா :**

பிற்காலத்தில் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், இரண்டாகப் பகுக்கப் பெற்றது.

1. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வ தேச ஒப்பந்தம்.
2. பொருளாதார, சமூக, பண்பாட்டுக்கான சர்வதேச ஒப்பந்தம்

இவற்றில் சர்வதேசப் பிரகடனத்தில் காணப்பட்ட மனித உரிமைகளும், சுதந்திரங்களும் மேலும் மேம்படுத்தப்பட்டு விரிவாக்கப் பட்டன. இந்த இரு ஒப்பந்தங்களுக்கும், ஐ.நா. பொதுச் சபை 1966-ல் ஒப்புதல் அளித்தது. இவை 1976 முதல் அமலுக்கு வந்தன.

இந்திய அரசு இந்த இரண்டு ஒப்பந்தங்களையும் ஏப்ரல் 10, 1979 அன்று ஏற்றுக்கொண்டது.

இந்த இரு விரிவான ஒப்பந்தங்களைத் தவிர, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தத்தின் இரண்டு விருப்ப அடிப்படை ஒப்பந்த வாசகத்திற்கும், ஐ.நா. பொதுச்சபை ஒப்புதல் அளித்தது.

a. முதலாவது விருப்ப ஒப்பந்தம் 1966
b. இரண்டாவது விருப்ப ஒப்பந்தம் 1989

தனி நபர்களின் மனித உரிமைகள் அரசுகளால் மீறப்படும் போது புகார் சமர்ப்பிக்க முதலாவது விருப்ப ஒப்பந்தம் வகை செய்கிறது. இரண்டாவது விருப்ப ஒப்பந்தம் மரண தண்டனையை அகற்ற வழி வகை செய்கிறது.

**இதர சர்வதேச மரபுமுறை ஒப்பந்தங்கள் :**

1. அனைத்து வகை இனப் பாகுபாட்டை அகற்றுவதற்கான ஒப்பந்தம் (1966)
2. பெண்களுக்கு எதிரான அனைத்து வகை பாகுபாட்டையும், அகற்றுவதற்கான ஒப்பந்தம் (1979)
3. சித்ரவதை, இதர கொடூர, மனிதாபிமானமற்ற, மோசமான தண்டனைகளுக்கு எதிரான ஒப்பந்தம் (1984)
4. மேம்பாட்டு உரிமைப் பிரகடனம் (1986)
5. குழந்தைகள் உரிமைக்கான மரபுமுறை ஒப்பந்தம் (1989)
6. குடி பெயர்ந்த அனைத்துத் தொழிலாளர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் உரிமைகள் பாதுகாப்பு ஒப்பந்தம் (1990)
7. மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் ஒப்பந்தம் (2006)
8. பூர்வகுடிமக்களின் உரிமைகளுக்கான ஐ.நா. பிரகடனம் (2007)

**இந்தியாவில் மனித உரிமைகள் :**

மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (1993) பிரிவு 2 இன் படி, ''மனித உரிமைகள்'' என்பது, அரசியலமைப்பால் வழங்கப்படுகின்ற அல்லது சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் இந்திய நீதிமன்றங்களால் செயல்படுத்தப்படுகின்ற தனிநபரின் வாழ்க்கை, சுதந்திரம், சமத்துவம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றுக்கான உரிமைகளைக் குறிக்கிறது.

இந்தியாவின் முகப்புரை வாசகம், அடிப்படை உரிமைகள், அரசுக் கொள்கைகளுக்கான நெறிமுறைக் கொள்கைகள் ஆகியவற்றில் 1948 சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் பல கொள்கைகளும், பிரிவுகளும் எதிரொலிப்பதை காணலாம்.

அடிப்படை உரிமைகளில் இடம் பெற்றுள்ள மனித உரிமைகளின் வரையறையை உச்ச நீதி மன்றம் அவ்வப்போது விரிவாக்கி வந்துள்ளது. ஆரோக்கியத்துக்கான உரிமை, விரைந்த வழக்கு விசாரணைக்கான உரிமை, சித்ரவதைக்கு எதிரான உரிமை, தனி உரிமை, வெளிநாடுகளில் பயணம் மேற்கொள்ளும் உரிமை, இலவச சட்ட உதவிக்கான உரிமை போன்றவை அடிப்படை உரிமைகளில் பட்டியலிடப்படாத மனித உரிமைகளுக்கு உதாரணங்கள் ஆகும்.

அரசியலமைப்பு சட்டம், நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப் பேரவைகள் இயற்றிய சட்டங்களில் பல்வேறு மனித உரிமைகள் இடம் பெற்றிருப்பதுடன் தேசிய மற்றும் மாநில ஆணையங்கள் அமைத்து அந்த உரிமைகளைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் வகை செய்கின்றன.

**மனித உரிமைகள் தொடர்பான தேசிய ஆணையங்கள்**

| எண் | தேசிய ஆணையத்தின் பெயர் | எச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது |
|---|---|---|
| 1. | பட்டியலினத்தோர் தேசிய ஆணையம் | அரசியல் சட்டம் (பிரிவு 338) |
| 2. | பழங்குடியினர் தேசிய ஆணையம் | அரசியல் சட்டம் (பிரிவு 338 A) |
| 3. | மொழி சிறுபான்மையினர் சிறப்பு அதிகாரி | அரசியல் சட்டம் (பிரிவு 338 B) |
| 4. | தேசிய மனித உரிமைகள் ஆணையம் | மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993 |
| 5. | குழந்தைகள் உரிமை பாதுகாப்பு தேசிய ஆணையம் | குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு ஆணையச் சட்டம் 2005 |
| 6. | தேசிய மகளிர் ஆணையம் | தேசிய மகளிர் ஆணையச் சட்டம் 1990 |
| 7. | தேசிய சிறுபான்மையினர் | சிறுபான்மையினர் தேசிய ஆணைச் |

| | | |
|---|---|---|
| | ஆணையம் | சட்டம் 1992 |
| 8. | தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணைச் சட்டம் 1993 |
| 9. | மாற்றுத் திறனாளிகள் மத்திய ஆணையர் | மாற்றுத் திறனாளிகள் சட்டம் 1995 |

**மனித உரிமைகள் தொடர்பான மாநில ஆணையங்கள்**

| எண் | தேசிய ஆணையத்தின் பெயர் | எச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது |
|---|---|---|
| 1. | மாநில மனித உரிமைகள் ஆணையம் | மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993 |
| 2. | குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மாநில ஆணையம் | குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு ஆணையச் சட்டம் 2005 |
| 3. | மாற்றுத் திறனாளிகள் மாநில ஆணையர் | மாற்றுத் திறனாளிகள் சட்டம் 1995 |
| 4. | எஸ்.சி., எஸ்.டி.க்களுக்கான மாநில ஆணையம் | மாநில சட்டப் பேரவை சட்டங்கள் அல்லது மாநில அரசின் நிர்வாகத் தீர்மானம் |
| 5. | மாநில மகளிர் ஆணையம் | மாநில சட்டப்பேரவை சட்டங்கள் அல்லது மாநில அரசின் நிர்வாகத் தீர்மானம் |
| 6. | மாநில சிறுபான்மையினர் ஆணையம் | மாநில சட்டப்பேரவை சட்டங்கள் அல்லது மாநில அரசின் நிர்வாகத் தீர்மானம் |
| 7. | மாநில பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | மாநில சட்டப்பேரவை சட்டங்கள் அல்லது மாநில அரசின் நிர்வாகத் தீர்மானம் |

**தேசிய மனித உரிமைகள் ஆணையம்**

தேசிய மனித உரிமைகள் ஆணையம் சட்டப்படியான (அரசியல் அமைப்புச் சட்டப்படியானதல்ல) அமைப்பு. 1993-ல் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட தேசிய மனித உரிமைகள் சட்டம் 1993-ன் படி அமைக்கப்பட்டது. இச்சட்டம் 2006 மற்றும் 2019-ல் திருத்தப்பட்டது.

நாட்டின் மனித உரிமைகளைக் கண்காணிக்கும் அமைப்பு ஆகும். அதாவது தனி நபர் வாழ்க்கை, சுதந்திரம், சமத்துவம், கண்ணியம் தொடர்பாக அரசியல் சட்டம் அல்லது சர்வ தேச ஒப்பந்தங்கள் உறுதியளித்துள்ள, உரிமைகளை இந்த ஆணையம் கண்காணிக்கும். மேலும் அவை, நீதிமன்றங்களில் செல்லத் தகுந்ததாகும்.

**ஆணையத்தின் அமைப்பு :**

- ❖ இது பல உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு. இதற்கு தலைவரும் 5 உறுப்பினர்களும் உள்ளனர்.
- ❖ தலைவர் உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியாக இருக்க வேண்டும்.
- ❖ உறுப்பினர்கள் தற்போது பணியில் உள்ள அல்லது ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி அல்லது பதவியில் உள்ள அல்லது ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருக்க வேண்டும். வேறு இரு உறுப்பினர்கள் மனித உரிமைகள் சார்ந்த அறிவு அல்லது நடைமுறை அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.
- ❖ இந்த 5 முழு நேர உறுப்பினர்கள் தவிர இந்த ஆணையத்தில் 7 பதவி வழி உறுப்பினர்கள் உள்ளனர். தேசிய சிறுபான்மையினர் ஆணையத் தலைவர், எஸ்.சி.க்களுக்கான தேசிய ஆணையத் தலைவர், எஸ்.டி.க்களுக்கான தேசிய ஆணையத் தலைவர், மகளிர் தேசிய ஆணையத் தலைவர் தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தலைவர், தேசிய குழந்தைகள் உரிமை ஆணையத் தலைவர், மாற்றுத் திறனாளிகளுக்கான மத்திய ஆணையர் ஆகியோர் இதன் இத்தகைய உறுப்பினர்கள்.

**தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC) தற்போதைய தலைவர்**

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC) தற்போதைய தலைவர் அருண் குமார் மிஸ்ரா ஆவார். அவர் இந்திய தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் எட்டாவது தலைவர் ஆவார்

| வ.எண் | பெயர் | தலைவர் |
|---|---|---|
| 1. | நீதியரசர் அருண் குமார் மிஸ்ரா | தலைவர் |
| 2. | டாக்டர் தியானேஷ்வர் மனோகர் முலே | உறுப்பினர் |
| 3. | ராஜீவ் ஜெயின் | உறுப்பினர் |
| 4. | திரு. இக்பால் சிங் லால்புரா, தலைவர், சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையம் | முன்னாள் உத்தியோகபூர்வ உறுப்பினர் |
| 5. | விஜய் சாம்ப்லா, பட்டியல் இனத்தவர் தேசிய ஆணையம் | முன்னாள் உத்தியோகபூர்வ உறுப்பினர் |
| 6. | ஹர்ஷ் சௌஹான், தலைவர், பழங்குடியினருக்கான தேசிய ஆணையம் | முன்னாள் உத்தியோகபூர்வ உறுப்பினர் |
| 7. | திருமதி ரேகா ஷர்மா, தலைவி, தேசிய மகளிர் ஆணையம் | முன்னாள் உத்தியோகபூர்வ உறுப்பினர் |
| 8. | பிரியங்க் கனூங்கோ, தலைவர், குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய ஆணையம் | சட்டப்பூர்வ முழு ஆணையத்தின் சிறப்பு அழைப்பாளர் |
| 9. | ஹன்ஸ்ராஜ் கங்காராம் அஹிர், தலைவர், தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | முன்னாள் உத்தியோகபூர்வ உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 10. | மாற்றுத்திறனாளிகளுக்கான தலைமை ஆணையர் | முன்னாள் உத்தியோகபூர்வ உறுப்பினர் |

பிரதமர் தலைமையிலான 6 உறுப்பினர் குழு பரிந்துரையின் பேரில் இந்த ஆணையத்தின் தலைவர் உறுப்பினர்களை குடியரசுத் தலைவர் நியமனம் செய்வார். இக்குழுவில் மக்களவைத் தலைவர், மாநிலங்களவைத் துணைத் தலைவர், நாடாளுமன்ற இரு அவைகளின் எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர்.

ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஐந்து ஆண்டுகளுக்கோ அல்லது அவர்கள் 70 வயதை அடையும் வரையிலோ இவற்றில் எது முந்தியதோ அதுவரை பதவியில் இருப்பார்கள்.

**ஆணையத்தின் செயல்பாடு :**

ஆணையத்தின் தலைமையிடம் புதுதில்லியில் அமைந்துள்ளது. இது இந்தியாவின் பிற இடங்களிலும் அலுவலகங்களை அமைத்துச் செயல்படலாம். தனது சொந்த நடைமுறைகளை ஆணையமே ஏற்படுத்திக் கொள்ளும். இதற்கு சிவில் நீதிமன்றத்திற்கான அதிகாரங்கள் உண்டு. இதன் நடைமுறைகள் நீதிமன்ற நடவடிக்கைப் பண்புகளைக் கொண்டிருக்கும்.

மனித உரிமைகள் மீறப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் நடைபெற்ற ஓராண்டுக்குப் பின் அது குறித்து விசாரணை நடத்த ஆணையத்திற்கு அதிகாரம் இல்லை. அதாவது மனித உரிமை மீறல் நடைபெற்ற ஓராண்டுக்கு உட்பட்ட சம்பவங்களையே இது விசாரிக்க முடியும்.

**ஆணையத்தின் பணி**

i. ஆணையத்தின் பணி பெரும்பாலும் பரிந்துரை செய்தல் என்ற அடிப்படையிலேயே அமைந்துள்ளன.
ii. மனித உரிமைகள் மீறியதற்கு காரணமானவர்களை தண்டிக்கும் அதிகாரம் இதற்கு இல்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு பண இழப்பீடுகளை வழங்கும் அதிகாரமும் இதற்கு இல்லை.
iii. ஆணையத்தின் பரிந்துரைகள் அரசையோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரியையோ கட்டுப்படுத்தக் கூடியவை அல்ல.

**மனித உரிமைகள் (திருத்தம்) சட்டம், 2006**

1. மாநில அரசுகளுக்குத் தெரிவிக்காமல் சிறைகளை பார்வையிட NHRCக்கு அதிகாரம் அளித்தல்

2. விசாரணையின் போதே இழப்பீடு வழங்க பரிந்துரை செய்ய ஆணையங்களுக்கு அதிகாரம் அளித்தல்

குறிப்பு: தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் முதல் தலைவர் ரங்கநாத் மிஸ்ரா ஆவார்.

**மாநில மனித உரிமைகள் ஆணையம்**

- ❖ இருபத்தைந்து மாநிலங்கள், அதிகாரப்பூர்வ அரசிதழ் அறிவிப்புகள் மூலம் மாநில மனித உரிமைகள் ஆணையங்களை அமைத்துள்ளன.
- ❖ தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையம் ஏப்ரல் 17, 1997 இல் நிறுவப்பட்டது.

**ஆணையத்தின் அமைப்பு**

- ❖ ஒரு தலைவர் மற்றும் இரண்டு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- ❖ தலைவர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியாக இருக்க வேண்டும்.
- ❖ உறுப்பினர்கள் உயர் நீதிமன்றத்தில் பணிபுரியும் அல்லது ஓய்வு பெற்ற நீதிபதியாகவோ அல்லது குறைந்தபட்சம் ஏழு ஆண்டுகள் மாவட்ட நீதிபதியாக அனுபவத்துடன், மனித உரிமைகள் தொடர்பாக அறிவு அல்லது நடைமுறை அனுபவம் உள்ள மாவட்ட நீதிபதியாகவோ இருக்க வேண்டும்.
- ❖ தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்படுவார்கள் ஆனால் குடியரசு தலைவரால் மட்டுமே நீக்கப்பட முடியும்

**தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம்**

| பொறுப்பு | பெயர் |
|---|---|
| தலைவர் | மாண்புமிகு திரு. நீதிபதி எஸ்.பாஸ்கரன் |
| உறுப்பினர் | மாண்புமிகு திரு.நீதிபதி ராஜா இளங்கோ |
| உறுப்பினர் | மாண்புமிகு திரு.நீதிபதி.வி.கண்ணதாசன் |
| செயலாளர் | டாக்டர் கே. விஜயகார்த்திகேயன் ஐயுளு |

**ஆணையத்தின் பணிகள்**

அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையின் மாநிலப் பட்டியல் (பட்டியல்-II) மற்றும் பொது பட்டியல் (பட்டியல்-III) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளில் மட்டுமே மாநில மனித உரிமைகள் ஆணையம் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க முடியும்.

**மனித உரிமைகள் நீதிமன்றங்கள் :**

வழக்குகளை விரைவாக விசாரிக்க நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும், மனித உரிமைகள் நீதி மன்றத்தினை அமைக்க மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993 வகை செய்கிறது. மாநில அரசுகள் அந்தந்த மாநில உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி ஒப்புதலுடன் இவற்றை அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு மனித உரிமைகள் நீதி மன்றத்திற்கும், அரசு வழக்கறிஞரை நியமிக்கலாம் அல்லது 7 ஆண்டுகள் அனுபவம் மிக்க வழக்கறிஞரை சிறப்பு அரசு வழக்கறிஞராக நியமிக்கலாம்.

**குழந்தைகள் உரிமைகள்**

1989 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் தேதி ஐநா சபையால் குழந்தைகளின் உரிமைகளுக்கான ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டை சர்வதேச குழந்தைகளின் ஆண்டாக ஐநா அறிவித்துள்ளது.

**குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல்**

- குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1986
- தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (2007)
- தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (2007)
- கல்வி உரிமைச் சட்டம், (சரத்து 21A) 2009
- பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் (போக்சோ) சட்டம், 2012 - நவம்பர் 14, 2012 முதல் நடைமுறைக்கு வந்தது மற்றும் 2019 இல் திருத்தப்பட்டது
- சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 - ஜனவரி 15, 2016 முதல் அமலுக்கு வந்தது

APOLLO STUDY CENTRE